மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) இது குறித்த தீர்மானத்தை "மூவ்" பண்ணுங்கள்.

4. அரசினர் தீர்மானம்

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே,

"மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தின் மீதான விவாதத்தை நிறுத்தி வைத்து விட்டு, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/74) ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றிவிட்டு, அதற்குப்பின் இந்த விவாதத்தைத் தொடரலாம்"

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

THIRU K. T. K. TANGAMANI : The House should not be treated like this.

தீர்மானம் என்னவென்றே தெரியவில்லை. என்ன தீர்மானம் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே நான் முதலிலேயே தீர்மான வடிவில் இதைக் குறிப்பிட்டேன். இப்பொழுது நடைபெறும் இந்த விவாதத்தை நிறுத்திவிட்டு, நிதி ஒதுக்க மசோதாவை எடுத்துக் கொண்டு, அது நிறைவேறியதற்குப் பிறகு, இந்த விவாதத்தைத் தொடரலாம். பிற்பகல் 1-30 மணி அளவில் அவையை ஒத்திவைத்து, மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடி அலுவல்களைத் தொடரலாம் என்ற தீர்மானத்தை நான் முன்மொழிந்து அது நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

(5) அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/74).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு, 1974ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கோருவார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்று நான் முன்மொழிகின்றேன்.